இசையாஸ் ஆகமம் 41:13

ஏனெனில் உன் கடவுளாகிய ஆண்டவர் நாமே உன்னுடைய வலக் கையைப் பிடித்துக் கொண்டு, "அஞ்சாதே, நாமே உனக்குத் துணையாயிருப்போம்" என்று உன்னிடம் சொல்லுகின்றோம்.

பழமொழி ஆகமம் 3:5-6

நீ உன் விவேகத்திலேயே ஊன்றி நில்லாமல், உன் முழு இதயத்துடனே ஆண்டவர்மேல் நம்பிக்கை வை. உன் வழிகள் அனைவற்றிலும் அவரை நினைப்பாயாகில், அவர் உன்னை வழி நடத்துவார்.

பழமொழி ஆகமம் 16:9

மனிதனுடைய இதயம் தன் வழியைச் சீர்ப்படுத்துகின்றது. ஆனால், கடவுள்தாமே அவனுடைய அடிச் சுவடுகளை நடத்துகிறவர்.

சங்கீதங்கள் 72:26

என் உடலும் உள்ளமும் சோர்வடைகின்றன. ஆயினும் கடவுளே என் உள்ளத்துக்கு அரண், என்றென்றைக்கும் என் உரிமைச் சொத்து.

சங்கீதங்கள் 120:1-2

மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்தினேன்: "உதவி எனக்கு எங்கிருந்து வரும்?" உதவி எனக்கு ஆண்டவரிடமிருந்தே வரும்: அவரே வானமும் வையமும் படைத்தவர்.

உரோமையர் 12:16

உங்களுக்குள் ஒன்றுபட்டு வாழுங்கள். உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்ந்தவர்களோடு அன்பாய்ப் பழகுங்கள். உங்களை நீங்களே அறிவாளிகளாய்க் கருதாதீர்கள்.

பழமொழி ஆகமம் 19:21

மனிதனின் இதயத்தில் சிந்தனைகள் பலவாம். ஆண்டவர் திருவுளமோ நிலைபெற்றிருக்கும்.

சங்கீதங்கள் 120:3

உன் கால் இடற விடமாட்டார்: உன்னைக் காக்கும் அவர் உறங்கி விட மாட்டார்.

பிலிப்பியர் 4:11

நான் இவ்வாறு சொல்வது எனக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு குறையினாலன்று. ஏனெனில், எந்நிலையிலும் போதுமென்ற மனத்தோடு வாழக் கற்றுக்கொண்டேன். வறுமையிலும் வாழத்தெரியும்.

சங்கீதங்கள் 22:1-2

என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு! பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.

இசையாஸ் ஆகமம் 40:29

அவரே களைத்தவனுக்குப் பலம் தருகிறார், வலிமையும் சக்தியும் அற்றவர்க்கு அவற்றை ஊட்டுகிறார்.

மத்தேயு 6:34

நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். நாளைய தினம் தன்னைப்பற்றிக் கவலைகொள்ளும். அன்றன்றைய தொல்லை அன்றன்றைக்குப் போதும்.

சங்கீதங்கள் 15:8

ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்: அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன்.

அருளப்பர் 15:5

நான் திராட்சைக் கொடி; நீங்கள் அதன் கிளைகள். ஒருவன் என்னுள்ளும் நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனி தருவான். ஏனெனில், என்னை பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

பழமொழி ஆகமம் 10:22

கடவுளின் ஆசியால் மனிதர் பொருள்வளமுள்ளவராவர். துன்பமும் அவர்களைச் சேராது.

சங்கீதங்கள் 93:18

இதோ, என் நடை தள்ளாடுகிறது" என்று நான் நினைக்கையில், ஆண்டவரே, உம் அருள் என்னைத் தாங்குகிறது.

சங்கீதங்கள் 126:1

ஆண்டவரே, வீட்டைக் கட்டினாலொழிய, அதைக் கட்டுபவர்களின் உழைப்பெல்லாம் வீணே: ஆண்டவரே நகரைக் காத்தாலொழிய, அதைக் காப்பவன் விழிப்பெல்லாம் வீணே.

உரோமையர் 12:4-5

ஒரே உடலில் நமக்கு உறுப்புகள் பல உள; அந்த உறுப்புகளெல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை. அதுபோலவே பலராயிருக்கிற நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம்.

1 நாள் ஆகமம் 29:14

இவற்றை எல்லாம் உமக்குக் கொடுக்க நான் யார்? என் குடிகளுக்கும் என்ன உரிமை இருக்கிறது? எல்லாம் உம்முடையன. உம் கைகளினின்று நாங்கள் பெற்றுக்கொண்டதையே உமக்குத் திரும்பக் கொடுத்துள்ளோம்.

சங்கீதங்கள் 117:5

துன்ப வேளையில் நான் ஆண்டவரைக் கூவியழைத்தேன்: ஆண்டவரும் என் மன்றாட்டைக் கேட்டு எனக்கு விடுதலை அளித்தார்.

யாத்திராகமம் 14:14

ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார். நீங்கள் பேசாதிருங்கள் (என்றுரைத்தார்).

சங்கீதங்கள் 15:1

இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடன் நான் அடைக்கலம் புகுந்தேன்.

சங்கீதங்கள் 43:3

எங்கள் முன்னோர் நாட்டைக் கைப்பற்றியது தங்கள் வாளின் வலிமையால் அன்று, அவர்களுக்கு மீட்பு கிடைத்தது தங்கள் கைவன்மையால் அன்று: உமது வலக்கரமும் உமது புயப்பலமும், உம் முகத்தினின்று எழுந்த பேரொளியுமே அவர்களுக்குத் துணை நின்றது; ஏனெனின், நீர் அவர்கள் மீது அன்பு கூர்ந்தீர்.

உரோமையர் 8:8

ஊனியல்பினர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது.

சங்கீதங்கள் 79:19

ஆண்டவரே, சேனைகளின் இறைவனே, எங்களுக்கு மீண்டும் வாழ்வளித்தருளும். எங்களுக்கு மீட்புக் கிடைக்க, எங்களுக்கு இன்முகம் காட்டியருளும்.